மனிதநேய கவசம்

மாத இதழ்

MANITHA NEIYA KAVASAM

मणिथानेय कवसम्

Run by Humanity Protection Organization Trust

(Registered by Govt. of India)

Registration No. TNTAM/25/A2910

கவசம் Volume 2 | இதழ் Issue 9 | ஜூன் 2026 | ₹.12/-

E-331/48, Meenakshi Road, TVS Nagar, Madurai - 625003. Ph : 0452-2600105

2026 சட்டமன்ற தேர்தலில் தனிப்பெரும்
கட்சியாக போட்டியிட்டு வெற்றி பெற்ற
தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும்,
தமிழ்நாட்டின் முதலமைச்சருமான
மாண்புமிகு **ச. ஜோசப் விஜய்**
அவர்களுக்கு மனிதநேய கவசம் மற்றும்
மனிதநேய நுகர்வோர் பாதுகாப்பு ஆர்கனைஷேசன்
சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

வருகின்ற **22.06.2026** அன்று **53**வது
பிறந்தநாள் காணும் மாண்புமிகு **முதலமைச்சர்**
அவர்களுக்கு எங்களது அன்பார்ந்த பிறந்தநாள்
வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

மதுரை மாவட்ட புதிய ஆட்சித் தலைவராக 1.6.2026 அன்று பொறுப்பேற்கும் திரு. **P.** ஆகாஷ் **IAS** அவர்களுக்கு மனிதநேய கவசம் மற்றும் மனிதநேய நுகர்வோர் பாதுகாப்பு ஆர்கனைஷேசன் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

GPay ல வேற நம்பருக்கு தவறா பணம் அனுப்பிட்டீங்களா?
பணம் திரும்ப கிடைக்க இத பண்ணுங்க....
முனைவர் **ந. அசோகன்** HCPO மதுரை

hpo.kavasam@gmail.com | www.hpokavasam.org | 98650 91526, 99525 33887

காரோஸ்®

பாரம்பரியமிக்க அக்மார்க் மரச்செக்கு எண்ணெய்கள்

ISO 22000 : 2018

கடலை மிட்டாய் | கோகோ மிட்டாய் | எள் மிட்டாய் | பொரி உருண்டை

காரோஸ்® மரச்செக்கு எண்ணெய்

7, சேர்மன் A. சண்முகம் ரோடு, சிவகாசி.

தொடர்புக்கு : 73730 47255

corosoil.office@gmail.com

www.corosoil.com

ஆசிரியர் பார்வை....

அன்பார்ந்த நேயர்களே! வணக்கம்...

மனிதநேய கவசம் மாத இதழ் வாயிலாக பிரதி மாதம் தங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். இயந்திரமான இன்றைய உலகில் நுகர்வோராகிய நாம் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்படுகிறோம். இந்நிகழ்வு நம்முடைய அறியாமையால் ஏற்படுவது ஒருபுறம் இருந்தாலும், மறுபுறம் நேரடியாக ஆன்லைன் மூலமாக பொருட்கள் வாங்கும்போது பல சந்தர்ப்பங்களில் நாம் தெரிந்தே ஏமாறுகிறோம். இதற்கு நாம் விழிப்புடன் இல்லாததே காரணம்.

இந்த இதழில் நுகர்வோர் பயன்பெறக்கூடிய தகவல்கள் பல இடம்பெற்றுள்ளன. குறிப்பாக முதியோருக்கு மருத்துவக் காப்பீடு, ஆன்லைன் மூலம் பொருள் வாங்குவதால் ஏற்படும் மறைமுக ஆபத்துக்கள், ஆன்லைன் மூலம் பட்டாவில் பெயர் மாற்றம், மின்சார உரிமைகள் பற்றிய விதிகள், பொதுமக்கள் பயன்பெறும் இலவச மின்சாரம், காய்கறிகளை மரப்பலகையில் வெட்டினால் ஏற்படும் ஆபத்துகள், **G-Pay** மூலம் தவறாக பணம் அனுப்பினால் திரும்ப கிடைக்க வழி, வாட்ஸ் ஆப் மூலம் பண மோசடி, செல்போன் மூலம் கடன் கொடுத்து ஏமாற்றும் கும்பல் போன்ற பல குறிப்புகளை தெரிவித்துள்ளோம். ஏமாறுவது குற்றம் - ஏமாற்றப்படுவது பெருங்குற்றம். இதை கருத்தில் கொண்டு ஒவ்வொரு நுகர்வோரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

உணவின் அவசியத்தை நன்கு அறிந்து உணவை வீணாக்காமல் தேவைக்கேற்ப பயன்படுத்துவோம். ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கு ஊட்டச்சத்துள்ள சிறுதானிய உணவுகளை நாம் அன்றாடம் உணவுப் பழக்கத்தில் பயன்படுத்துவோம். **மீண்டும் புதிய செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்...**

– முனைவர் **ந. அசோகன்,** பதிப்பாசிரியர் (பொ)

ஆதிசங்கரர் வழிபட்ட பிள்ளையார்

காரைக்குடிக்கு அருகிலுள்ள கோவிலூர் மடாலயத்தில், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ‘ஸ்ரீசங்கர விஜயம்‘ (சித்விலாஸீ சங்கர விஜயம்) என்ற தலைப்பில், சுவடி எண் KM 0017 என்ற ஓலைச்சுவடித் தொகுப்பு உள்ளது. அதில் 13-வது அத்தியாயத்தில் ஸ்ரீசங்கரரின் காசி வாசம் பற்றி விவரிக்கப்படுகிறது. 120-வது சுவடியில், ‘ஒரு பிரம்மசாரி சங்கரருடைய பாதங்களில் சரணடைந்து சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான். மேலும், அன்று முதல் அவருடைய வஸ்திரங்களை துவைப்பது, அனுஷ்டானத்திற்குத் தேவையான உபகரணங்களை எடுத்துவைப்பது போன்ற பணிகளைச் செய்து வந்தான்...‘ என்ற விவரம் உள்ளது.

இதுபற்றி விவரிக்கும் சங்கரவிஜயம், அந்த சிஷ்யர் சங்கரருடைய சந்திர மௌலீஸ்வரர் முதலான விக்ரஹங்களின் பூஜைக்குத் தேவையான அபிஷேகப் பொருள்கள், பாத்திரங்கள், புஷ்பங்கள் முதலியவற்றை எடுத்துவைப்பதாகவும் (122-ம் எண் சுவடியில்) தெரிவிக்கிறது. இந்தக் குறிப்புகளின் மூலம், அதற்கு முந்தைய காலத்திலிருந்தே சங்கரர், சந்திரமௌலீஸ்வரர் ரத்னகர்ப கணபதி முதலான விக்ரஹங்களை ஆராதித்து வந்தார் என்று தெரிகிறது. மேற்கண்ட சுவடித்தொகுப்பில் சுவடி எண் 297-ல் ஒரு தகவல் சொல்லப்பட்டுள்ளது.

‘அப்படி சிவபெருமானிடமிருந்து தொடங்கி, வழிவழியாக தமக்கு வந்து, வெகுகாலம் தான் வைத்திருந்த ரத்ன கர்ப கணபதி என்ற விநாயகப்பெருமானின் மூர்த்தியையும் ஸ்ரீசந்திர மௌலீஸ்வர ஸ்படிக லிங்கத்தையும் பிற்காலத்தில் ஸ்ரீசுரேஸ்வராச்சாரியாரிடம் அளித்தார்‘ என்பதுதான் அந்தத் தகவல். இப்படி சங்கரரால் சுரேஸ்வரருக்கு அளிக்கப்பட்ட அந்த கணபதி மூர்த்தி, சுரேஸ்வரரால் வழிபடப்பட்டது. அதன் பிறகு, ஸ்ரீசாரதா பீடத்தில் அருளாட்சி புரிந்த மகான்களால் ஆராதிக்கப்பட்டு, இன்றும் தொடர்கிறது. அந்தக் கணபதி மூர்த்தியும் எல்லா சிருங்கேரி ஜகத்குருக்களிடமும் சாந்நித்தியம் அருளி, அவ்வப்போது லீலைகள் புரிந்து வந்தார். கணபதிபெருமானின் அந்த லீலைகள் சிலிர்க்க வைப்பவை!

மனிதநேய கவசம் 2 | இதழ் 9 | ஜூன் 2026

நிறுவனர் மற்றும் வெளியீட்டாளர், ஆசிரியர்
முனைவர் **ந. அசோகன்** M.A.,
துணை ஆசிரியர்
Er. **மு. குமரன்** B.Tech.,
இணை ஆசிரியர்கள்
முனைவர் **க. ஜெயசங்கர்** D.M.E.,
முனைவர் **வ. சண்முகசுந்தரம்** M.A.,
திரு. **ச. குமரவேல்** B.Sc., M.A.,
(ப.நி., கூடுதல் காவல் கண்காணிப்பாளர்)
திரு. **N. சிவானந்தம்** D.M.E.,
புரவலர்கள்
முனைவர் **ப. கார்வாணன்**
முனைவர் **ப. கணேசன்**
திரு. **ரா. முருகானந்த்**
திரு. **ப. பாலாஜி**
திரு. **த. இராமச்சந்திரகுமார்** D.Pharm.,
முனைவர் **பா. சேசுராஜா** M.Sc., B.Ed.,
திரு. **காந்திலால் D. பட்டேல்**
திரு. **ச. ராமசுப்ரமணியன்**
திரு. **க. ஜெயசீலபாண்டியன்**
உதவி ஆசிரியர்கள்
முனைவர் **சு. முருகன்**
M.A.,M.A.,M.A.,M.Ed.,M.Phil.,Ph.D.,PGDJMC, DTE
திரு. **நீ.கி. கார்த்திக்** B.C.A.,
திரு. **ச. தாமோதரன்**
நிர்வாக மேலாளர்
திருமதி. **கோ. ஜெயலெட்சுமி** B.B.A.,
சிறப்பு நிருபர்
திரு. **சி. குட்லக் முருகன்** D.F.S.,
திரு. **R. முருகன்** B.A.,
புகைப்பட கலைஞர்
திரு. **ச. ராஜாகண்ணன்** D.M.E.,
திரு. **ரா. சுரேஷ்**
சட்ட ஆலோசகர்கள் மதுரை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்
திரு. **ஜோ. அழகுராம் ஜோதி** M.A.,B.L.,
திரு. **இரா. செல்வராஜ்** B.Sc.,B.L.,

வெளியீட்டாளர் அலுவலக முகவரி :
மனிதநேய கவசம் மாத இதழ்
இ-331/48, மீனாட்சி ரோடு, TVS நகர்,
மதுரை - 625 003.
பிரிண்ட் பெயர் மற்றும் முகவரி :
Dr. **இரா. கண்ணன்** M.D.(E),
சுந்தரராஜா பிரிண்டர்
25B, R.M.S. காலனி, 4வது கிராஸ் தெரு,
முத்துப்பட்டி, மதுரை - 625 003.
இணையதளம் உருவாக்கம்
திரு. **மூ. குட்டிசங்கர்** B.Sc.,M.B.A.,
Ungal.com
தொலைபேசி எண் :
98650 91526, 99525 33887
மின்னஞ்சல் :
hpo.kavasam@gmail.com, www.hpokavasam.org

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே, விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு 'மனிதநேய கவசம்' பொறுப்பல்ல

Subject to Madurai Jurisdiction

இதழின் உள்ளே...

முதியோருக்கும் இனி மருத்துவக் காப்பீடு சாத்தியம்! .... 5 to 6

ஆன்லைன்ல பொருள் வாங்குறீங்களா? EMI யில் மட்டும் போடாதீங்க... பெருகும் மறைமுக ஆபத்து... .... 7 to 8

Gpay வேற நம்பருக்கு தவறா பணம் அனுப்பிட்டிங்களா? பணம் திரும்ப கிடைக்க இத பண்ணுங்க... .... 9 to 10

போக்குவரத்து விதிகளை மீறியதாக கூறி வாட்ஸ் ஆப் மூலம் பண மோசடி : காவல்துறை எச்சரிக்கை 10

புதிய வசதி ! பட்டாவில் பெயர் மாற்றம் ஆன்லைனில் செய்யலாம் - தமிழக அரசின் அறிவிப்பு 15

உங்கள் மின்சார உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள் .... 16 to 18

செல்போன் செயலிகள் மூலம் கடன் கொடுத்து ஏமாற்றும் கும்பல் 19

200 யூனிட் வரை மின்சாரம் இலவசம். 2.23 கோடி குடும்பங்கள் பயன்பெறும் .... 20 to 21

இல்லத்தரசிகளே மரப்பலகைகளில் காய்கறி வெட்டுகிறீர்களா? ஆபத்து... .... 21 to 22

முதியோருக்கும் இனி மருத்துவக் காப்பீடு சாத்தியம்!



இப்போது முதியோருக்கான காப்பீட்டை சாத்தியமாக்கியிருக்கிறது. மருத்துவக் காப்பீடு புதிதாக எடுப்பதற்கான உச்சபட்ச வயது வரம்பு 65 என இருந்ததை அது நீக்கியிருக்கிறது.

கடந்த 2016ம் ஆண்டு மருத்துவக் காப்பீட்டுக்கான ஒழுங்குமுறைகளை காப்பீட்டு ஆணையம் வரையறை செய்திருந்தது. 65 வயது வரை உள்ளவர்களுக்கு வயதைக் காரணம் காட்டி மருத்துவக் காப்பீட்டு பாலிசி புதிதாக எடுப்பதை மறுக்கக்கூடாது' என்று அப்போது விதி உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டு ஏப்ரல 1 முதல் அதை மாற்றி, புதிய நெறிமுறைகளை அறிமுகம் செய்திருக்கிறது. இதில் உச்சபட்ச வயது வரம்பு 65 என இருந்ததை நீக்கிவிட்டது.

சீனியர் சிட்டிசன்கள் பலரையும் அச்சுறுத்தும் விஷயம் முதுமை இல்லை. அந்த வயதில் வரும் நோய்களும் அவற்றுக்கான செலவுகளும்தான்! சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம் போன்ற வாழ்நாள் நோய்களும் இன்னபிற நோய்களும் அந்த வயதில் கேட்காமலேயே வந்து முதுகில் ஏறிக்கொள்ளும். சேமிப்புகள் பெரும்பாலும் மருத்துவச் செலவுகளில் கரைந்துவிடும். அதுவரை மருத்துவக் காப்பீடு எடுக்காத பலரும், தங்கள் தவற்றை நினைத்து வருந்துவார்கள். முதிய வயதில் புதிதாக மருத்துவக் காப்பீடு எடுப்பது கடினம், சில நிறுவனங்கள் அந்தக் காப்பீட்டு வசதியைக் கொடுத்தாலும், அதில் மூச்சடைக்கும் அளவுக்கு விதிமுறைகள் இருக்கும்.

இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI)

இதேபோல இன்னொரு முக்கிய மாற்றமும் செய்யப்பட்டுள்ளது. மருத்துவக் காப்பீடு எடுக்கும் எவரும், முன்பே தமக்கு என்னென்ன நோய்கள் இருக்கின்றன என்று குறிப்பிட வேண்டும். அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு அந்த நோய்களால் பாதிக்கப்பட்டால், அது காப்பீட்டு வரையறைக்குள் வராது. உதாரணமாக,

இதய பலவீனம் தனக்கு இருப்பதாகக் குறிப்பிடும். ஒருவருக்கு பாலிசி எடுத்த நாளிலிருந்து நான்கு ஆண்டுகளுக்குள் மாரடைப்பு ஏற்பட்டால், அவர் அதற்குக் காப்பீட்டுச் சலுகையைப் பெற முடியாது. Pre existing condition எனப்படும் இதற்கான காத்திருப்புக் காலத்தை இப்போது மூன்று ஆண்டுகளாகக் குறைத்திருக்கிறது IRDAI. இது முதியோருக்கு மட்டுமன்றி, நோயால் பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் ஆறுதல் தரும் செய்தி.

அவற்றில் முன்புகூட சில காப்பீட்டு நிறுவனங்கள் 65 வயது கடந்தவர்களுக்கு புதிதாக மருத்துவக் காப்பீடு வழங்கும் திட்டங்களை வைத்திருந்தன. ஆனால் கடுமையான விதிமுறைகள் இருந்தன. 10 லட்ச ரூபாய்க்குக் காப்பீடு எடுக்கவே ஒருவர் 35,000 ரூபாய் முதல் 50,000 வரை ஆண்டு பிரீமியம் செலுத்த வேண்டும். 30 வயதில் இருக்கும் ஆரோக்கியமான இளைஞர் இதற்கு அதிகபட்சம் 10,000 ரூபாய் பிரீமியம் செலுத்த வேண்டியிருக்கும், முதியோர் இவ்வளவு அதிகமான பிரீமியம் செலுத்தினாலும், பல சேவைகளுக்கு அந்தக் காப்பீட்டின் பலன் கிடைக்காது. பார்வைக் குறைபாடு, காது தொடர்பான பிரச்சனைகள், தூக்கப் பிரச்சனைகள், பல் மருத்துவச் சேவைகளுக்குக் காப்பீட்டு நிறுவனம் செலவழிக்காது.

வெளி நோயாளியாக மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்றாலோ, பரிசோதனைகள் செய்து கொண்டாலோ காப்பீடு கிடைக்காது. ரோபோடிக் அறுவை சிகிச்சை வரை பல்வேறு நவீன சிகிச்சைகள் தற்போது அறிமுகமாகியிருக்க, அவற்றில் பெருப்பாலானவை முதியோருக்கான காப்பீட்டு வரம்பில் இடம்பெறாது. அப்படியே இடம்பெற்றாலும், அதில் காப்பீட்டு சிறிதளவு தொகையையே நிறுவனம் வழங்கும். எத்தனை நாள் மருத்துவமனையில் தங்கி ஒரு சிகிச்சையைப் பெறலாம். எவ்வளவு கட்டணம் கொண்ட படுக்கையில் தங்கலாம் என்று எல்லாவற்றிலும் கட்டுப்பாடுகள்.

இது பலவகைகளிலும் முதியோருக்குப் பாதகமாகி விடுகிறது. காப்பீடு இருந்தாலும், கைக்காசைச் செலவழிக்க வேண்டிய கட்டாயமும் சேர்ந்து கொள்வதால், பலரும் மருத்துவக் காப்பீட்டைத் தவிர்க்கின்றனர் அல்லது சிகிச்சையைப் பாதியிலேயே நிறுத்திவிடுகின்றனர். இந்தியாவில் நீண்ட ஆயுள் வாழ்கிறவர்கள் குறித்த ஓர் ஆய்வு (Longitudinal Ageing Study of India), '75 ஏதேனும் ஒரு நீண்ட கால நோயுடன் வாழ்கின்றனர்' என்று சொல்கிறது. அப்படி வாழ்கிறவர்கள், உரிய சிகிச்சை எடுத்து அந்த நோயைக் கட்டுக்குள் வைத்திருப்பது அவர்களின் வாழ்வுரிமை.

ஆன்லைன்ல பொருள் வாங்குறீங்களா? EMI யில் மட்டும் போடாதீங்க... பெருகும் மறைமுக ஆபத்து...

'இந்தியாவைப் பொறுத்தவரையில், இப்போது பல பொதுமக்கள் ஆன்லைன் மூலம் ஷாப்பிங் (Online Shopping) செய்வதை பழக்கமாக கொண்டுள்ளனர். என்ன தான் நேரில் சென்று அவர்களுக்கு பிடித்தமான பொருட்களை சில்லரை விற்பனையாளர் கடைகளில் Retailer shops பார்வையிட்டு, அதன் தரத்தை (Quality) நேரில் சோதனை செய்து பார்த்தாலும், பலர் வீடு திரும்பிய பிறகு, அதே பொருளை ஆன்லைனில் தான் ஆர்டர் (Online Order) செய்கிறார்கள். இந்த வினோதமான பழக்கம் இப்போது இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் என்று அனைவரிடமும் பெருகிவிட்டது. இதற்கான முக்கிய காரணம் இங்கு கிடைக்கும் சலுகை மற்றும் பேமெண்ட் விருப்பம் தான். ஆம், பொதுமக்களை பொறுத்தவரை, நேரடியாக கடைக்கு சென்று வாங்கும் பொருட்களை விட, ஆன்லைன் மூலம் வாங்கும் பொருட்களின் விலை குறைவாக இருப்பதாக கருதுகிறார்கள். பல பொருட்கள் ஆன்லைன் மூலம் வாங்கும் பொழுது சலுகையுடன் விலை குறைவாக (Offer Price) கிடைக்கின்றன. இது மக்களை கவர்கிறது. மற்றொருபுறம், ஆன்லைனில் பொருட்களை வாங்கும் பொழுது வட்டியில்லா தவணை முறையில் (No cost EMI) கட்டணத்தை செலுத்த வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஒரு பொருளை முழுமையாக பணம் (Cash) கொடுத்து வாங்க விரும்பாதவர்கள், இப்போது அவற்றின் விலையை தவணை முறையில் (EMI) செலுத்தி பயன்பெறுகிறார்கள். தவணை முறை என்றாலே அதற்கென்று நிறுவனங்கள் சில வட்டியை (Interest) வசூலிக்கின்றன. இது சிலருக்கு வீண் செலவாக தெரிந்த காரணத்தினால், EMI விருப்பம் (EMI

Options) மூலம் பொருட்களை வாங்கும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறைய துவங்கியது. இதை கவனித்த ஆன்லைன் ஷாப்பிங் தளங்கள் நோகாஸ்ட் EMI (No Cost EMI) என்றழைக்கப்படும் வட்டியில்லா தவணை முறையை அறிமுகம் செய்தன. இந்த நோ காஸ்ட் இஎம்ஐ விருப்பத்தின் மூலம், மக்கள் வட்டியே செலுத்தாமல், அவர்கள் வாங்கும் பொருளின் கட்டணத்தை தவணையாக செலுத்தலாம் என்று கூறப்படுகிறது. ஆனால், இதில் சில மறைமுக ஆபத்துகள் (Invisible Charges) நிறைந்திருப்பதாக நிதி சார்ந்த வல்லுநர்கள் (Financial Experts) எச்சரிக்கிறார்கள்.

இப்போது பெரும்பாலான ஆன்லைன் ஷாப்பிங் நிறுவனங்கள் பை நாவ் பே லேட்டர் (Buy Now, Pay Later) என்ற விருப்பத்தை அதிகமாக வழங்க துவங்கியுள்ளன. இந்த புதிய முறையின் மூலம், நீங்கள் ஒரு ரூபாய் பணம் கூட செலுத்தாமல், பொருட்களை ஆர்டர் (Order) செய்ய முடியும். இதற்கான கட்டணம் உங்களுடைய கிரெடிட் கார்ட் (Credit card) மூலம் பெறப்படும். இந்த விற்பனை முறை தற்போது இந்தியாவில் பெரியளவில் பெருகிவருகிறது.

கட்டாயம் நோகாஸ்ட் EMI மட்டும் போடாதீங்க.. மறைமுகமாக வசூலிக்கப்படும் கட்டணங்கள்:

என்னதான் நீங்கள் நோகாஸ்ட் EMI முறை போன்ற விருப்பங்களின் மூலம் பொருட்களை வாங்கினாலும், உங்களிடம் இருந்து மறைமுகமாக சில கட்டணங்கள் வசூலிக்கப்படும் என்பதே உண்மையாக இருக்கிறது. இதை பற்றி பலருக்கும் தெரியாமல் இருக்கிறது. குறிப்பாக இளைஞர்களுக்கு இதை பற்றி தெரியாமல் இருக்கிறது. இந்த கட்டண முறைகளை வங்கிகள் (Banks) வழங்குவதில்லை. ஆன்லைன் ஷாப்பிங் தளங்களே (Online shopping sites) வழங்குகின்றன.

ஆகையால், நீங்கள் வாங்கும் பொருளின் விலை எதுவாக இருந்தாலும், அதற்கான வட்டியை நிறுவனங்கள் மறைமுகமாக சேர்த்தே வசூலிக்கின்றன. உங்கள் வட்டி தொகை போக மீதி தொகை தான் உங்களுக்கு சலுகை தொகையாக வழங்கப்படுகிறது. இத்துடன் பிராசஸிங் ஃபீஸ் (Processing fees) என்று ரூ.99 முதல் ரூ.300 வரை கட்டணங்கள் உங்களிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது. இதற்கும் 18% ஜிஎஸ்டி (GST) வரி வசூலிக்கப்படுகிறது. உங்கள் வட்டி தொகை உடன் சேர்த்து பொருளின் விலை குறைக்கப் படுகிறதென்பதை தாண்டி, மறைமுகமாக பிராசஸிங் ஃபீஸ் மற்றும் மாதம் தோறும் ஜிஎஸ்டி கட்டணங்கள் வசூலிக்கப் படுகின்றன. இதை 6 மாதம் வரை செலுத்தும் பொழுது, உண்மையில் வீண் செலவாக அமைகிறது. கவனமாக இருக்கவும்.

S.Suresh Call : 98421 50793 , 88383 95692

Gpayல வேற நம்பருக்கு தவறா பணம் அனுப்பிட்டிங்களா? பணம் திரும்ப கிடைக்க இத பண்ணுங்க...

இந்தியாவில் போன்பே (Phonepe), பேடிஎம் (Paytm) போன்ற செயலிகளை விட கூகுள் பே (GPay) செயலியை அதிக மக்கள் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக கூகுள் பே (Google Pay) செயலியில் கோல்டு லோன், சிபில் ஸ்கோர் சரிபார்ப்பது எனப் பல்வேறு சிறப்பான அம்சங்கள் கிடைக்கிறது. எனவே தான் மற்ற யுபிஐ செயலிகளை விட கூகுள் பே செயலியை அதிக மக்கள் பயன்படுத்துகின்றனர்.

அதேபோல் கூகுள் பே மூலம் பணம் அனுப்பும்போது தவறுதலாக நாம் வேறு யாருக்காவது பணத்தை அனுப்பி விட்டால் அதை எப்படித் திரும்ப பெறுவது என்று பார்க்கலாம். அதாவது நாம் ஒருவருக்கு பணத்தை அனுப்ப வேண்டி கூகுள் பேவில் பணம் அனுப்பும்போது போன் நம்பரில் தெரியாமல் ஒரு நம்பரை மாற்றிப் போட்டால் கூட வேறு ஒருவரின் அக்கவுண்டிற்கு அந்த பணம் சென்று விடும்.

அப்படி தவறான யுபிஐ நம்பருக்கு பணம் போனால், அதனை பெற்றவரைத் தொடர்பு கொண்டு பணத்தை திரும்ப பெறுவதற்கு உதவி கோரலாம். அல்லது கூகுள் செயலியின் வாடிக்கையாளர் சேவை (கஸ்டமர் கேர்) எண்ணை தொடர்பு கொண்டு தவறாக பணம் அனுப்பிய விவரத்தைக் கூறலாம். பணத்தை திரும்ப பெற வேண்டியதற்கு, அது சார்ந்த தகவல்களை பயனர்கள் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

கூகுள் பே சேவை மையம் எண் 18004190157 என்று தெரியவருகிறது. அதன்பின்னர் கூட உங்களுக்குத் தீர்வு கிடைக்கவில்லை என்றால், ஆர்பிஐ அமைப்பின் NPCI portal இணையப் பக்கத்தில் புகார் அளிக்கலாம்.

அதன்படி வலைத்தளமான www.npci.org.in தளத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு What we do tab என்ற பக்கத்திற்குச் சென்று, பின்னர் UPIஐத் தேர்வு செய்து Dispute Redressal Mechanism என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

அந்த பக்கத்தில் இருக்கும் புகார் பெட்டியில் நீங்கள் மேற்கொண்ட தவறான பரிவர்த்தனை குறித்த விவரங்களைப் பதிவிடவும். அதாவது புகார் பெட்டியில், யுபிஐ பரிவர்த்தனை ஐடி, வங்கி பெயர், விர்ச்சுவல் பேமெண்ட் முகவரி, மாற்றப்பட்ட தொகை, பரிவர்த்தனை தேதி, மின்னஞ்சல் ஐடி மற்றும் மொபைல் எண் போன்றவற்றை கொடுக்க வேண்டும். இதைச் செய்தால் அடுத்த 24-48 மணி நேரத்தில் பணம் திரும்ப வரும்.

மேலும் ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி தவறான பண பரிமாற்றம் நடந்தால் 24 முதல் 48 மணி நேரத்தில் நம் பணம் திரும்ப கிடைத்துவிடும். அதிலும் பணம் செலுத்துபவர் மற்றும் பணம் பெறுபவர் வங்கிகளில் ஒரே வங்கியாக இருந்தால் பணத்தைத் திரும்பப் பெற குறைந்த நேரமே ஆகும். ஆனால், இரண்டு வங்கி கணக்குகளும் வெவ்வேறாக இருந்தால் பணத்தை திரும்பப் பெற அதிக நேரமாகும்.

போக்குவரத்து விதிகளை மீறியதாக கூறி வாட்ஸ் ஆப் மூலம் பண மோசடி : காவல்துறை எச்சரிக்கை

போக்குவரத்து விதிகளை மீறியதாக அபராதம் செலுத்தக் கூறி சமூக வலைதள செயலியான வாட்ஸ்ஆப் மூலம் பண மோசடி நடைபெறுவதால் இணைய பயனர்கள் கவனமுடன் இருக்குமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.சிலம்பரசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: தற்போது ஆர்.டி.ஓ. செலான் ஆப் என்ற பெயரில் வாட்ஸ்ஆப் மூலமாக மர்ம நபர்கள் பண மோசடியில் ஈடுபடுகின்றனர். இதில் அறிமுகம் இல்லாத எண்ணிலிருந்தோ அல்லது வாட்ஸ்ஆப் குழுக்களில் உள்ள நபர்களின் எண்களின் மூலமாகவோ பயனரின் வாட்ஸ்ஆப் எண்ணிற்கு, ஆர்.டி.ஓ. செலான் ஆப் என்ற செயலியை உடனடியாக பதிவிறக்கம் செய்து உங்கள் வாகனத்திற்கான அபராதத் தொகையை உடனே செலுத்த வேண்டும் எனக் கூறி கோப்பு ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

அபராதத் தொகையை செலுத்தவில்லையெனில் ஓட்டுநர் உரிமம் முடக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டிருப்பதை உண்மையென நம்பி அந்த செயலியை பதிவிறக்கம் செய்தால் உங்கள் வாட்ஸ்ஆப்பை ஹேக் செய்து அதில் உள்ள தகவல்கள் மூலமாக உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை எடுத்து மர்ம நபர்கள் மோசடி செய்வர்.

மேலும் அந்த செயலி குறித்த குறுஞ்செய்தி உங்கள் எண் மூலமாகவே உங்களுடன் தொடர்பில் உள்ள அனைவருக்கும் அனுப்பப்பட்டு அவர்களிடமும் பண மோசடியில் ஈடுபடுவர். எனவே இது போன்று வாட்ஸ்ஆப்பில் வரும் பதிவுகள் மற்றும் வங்கிகளின் சலுகைகள், அரசாங்க நலத்திட்ட மானியம் எனக்கூறி வரும் செயலி கோப்புகளை பதிவிறக்கம் செய்ய வேண்டாம்.

இதுபோன்ற சைபர் கிரைம் நடைபெற்றால் இணைய முகவரி அல்லது 1930 என்ற எண்ணில் அழைத்து உடனடியாக புகாரை பதிவு செய்ய வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம்

மனிதநேய நுகர்வோர் பாதுகாப்பு ஆர்கனைஷேசன்

2/1, நாவலர் நகர் 1வது தெரு, S.S. காலனி, பைபாஸ் ரோட்டில் இயங்கி வந்த நிலையில் தற்போது

12, பாரதியார் 4வது தெரு முதல்மாடி, S.S. காலனி, (முத்தூட் பைனான்ஸ் அருகில்), மதுரை - 16

இடமாற்றம் செய்யப்பட உள்ளது.

திறப்பு விழா நாள் : 12.06.2026 வெள்ளிக்கிழமை

நேரம் : காலை 9.30 - 10.30 மணிக்குள்

திருச்சி ஸ்ரீரங்கம் தேர் திருவிழாவை முன்னிட்டு **BG நாயுடு ஸ்வீட் குழுமத்தின்** சேர்மன் **பி. பாலாஜி** அவர்கள் தலைமையில் 14.05.2026 வியாழக்கிழமை காலை 5.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை பொதுமக்கள் சுமார் 5500 பேர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் **HCPO** நிறுவனத் தலைவர் **முனைவர் ந. அசோகன்,** அவர்கள் கலந்து கொண்டு, **BG நாயுடு** குடும்ப நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள்.

2026 தமிழக சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் மதுரையில் வெற்றி பெற்ற அனைத்து மாண்புமிகு அமைச்சர்களுக்கும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள். தங்களது பணி சிறக்க மனிதநேய கவசம் மாத இதழ் ஆசிரியர் முனைவர் ந. அசோகன் அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறார்.

மாண்புமிகு அமைச்சர் **CTR நிர்மல்குமார்**
மின்சாரத் துறை மற்றும் சட்டத்துறை (திருப்பரங்குன்றம்)

மாண்புமிகு அமைச்சர் **P. விஸ்வநாதன்**
உயர்கல்வித்துறை (மேலூர்)

திரு. **M.V. கருப்பையா**
சட்டமன்ற உறுப்பினர்
சோழவந்தான்

திரு. **S. கார்த்திகேயன்**
சட்டமன்ற உறுப்பினர்
மதுரை கிழக்கு

திரு. **A. கல்லாணை**
சட்டமன்ற உறுப்பினர்
மதுரை வடக்கு

திரு. **M.M. கோபிசன்**
சட்டமன்ற உறுப்பினர்
மதுரை தெற்கு

திரு. **V.M.S. முஸ்தபா**
சட்டமன்ற உறுப்பினர்
மதுரை மத்தி

திரு. **S.R. தங்கபாண்டி**
சட்டமன்ற உறுப்பினர்
மதுரை மேற்கு

திரு. **விஜய் மகாலிங்கம்**
சட்டமன்ற உறுப்பினர்
உசிலம்பட்டி

AAA COLLEGE OF ENGINEERING AND TECHNOLOGY

AN AUTONOMOUS INSTITUTION

Approved by AICTE - New Delhi / Affiliated to Anna University, Chennai
Accredited by NBA (CIVIL, CSE,ECE,EEE,MECH), Accredited by NAAC with 'A' Grade, An ISO 21001 : 2018 Certified Institution
Managed by Vinayaga - Sonny Fireworks Group of Industries / Panjurajan - Amaravathy Trust
Kamarajar Educational Road, Amathur-626 005, Sivakasi - Virudhunagar.

AUTONOMOUS

status by UGC and Anna University

TNEA COUNSELLING CODE **4680**

2026-2027

ADMISSION OPEN

COURSES OFFERED

B.E
- CIVIL
- CSE
- ECE
- EEE
- MECH
- CSE (CYBER SECURITY)

B.TECH
- INFORMATION TECHNOLOGY
- ARTIFICIAL INTELLIGENCE AND DATA SCIENCE
- ELECTRONICS ENGINEERING (VLSI DESIGN & TECHNOLOGY)

M.E
- CSE

Ph.D
- MECHANICAL ENGINEERING
- COMPUTER SCIENCE AND ENGINEERING
- ELECTRICAL AND ELECTRONICS ENGINEERING

FULL TIME AND PART TIME

NATIONAL BOARD OF ACCREDITATION CIVIL 2024-2027
NATIONAL BOARD OF ACCREDITATION CSE, ECE, EEE, MECH 2023-2026
Accredited by NAAC with 'A' Grade (2021-2026)
ISO An ISO 21001 : 2018 CERTIFIED INSTITUTION
MSME HOST INSTITUTE
StartupTN PRE-INCUBATION CENTRE

PROFESSIONAL CHAPTERS

ISTE IE IETE Analytics Society of India INSTITUTION'S INNOVATION COUNCIL SAEINDIA SOUTHERN SECTION ADVANCED IT SKILLS TRAINING

CENTRE OF EXCELLENCES

Riyasaa Labs, eyantra, ORACLE PRIMAVERA, BOSCH, redhat LINUX, TEXAS INSTRUMENTS, NATIONAL INSTRUMENT, THE CLOUDSPHERE INNOVATION CENTER

Contact: 04562 - 251111 / 12

admissions@aaacet.ac.in www.aaaenggcoll.ac.in

SRI VIDHYA BUILDERS

We Build Your Dream With Happiness

PROUD BNI Member

Er. J. Manikandan, M.E., (Structural),
P.E., M.I.E., MIIT (Arb), C. Engg.

உங்கள் கனவு இல்லம் நனவாகிட

OUR SERVICES

- Constructions
- Residentials
- Consultation
- Commercials
- School Buildings
- Marriage Hall
- Restaurants
- Storage Yards

All Turnkey Projects

No.4/6/9., Near Military Canteen, Alamelu Nagar 1st Street, Thabal Thanthi Nagar,
Madurai - 625 017. Mobile : 99658 56816 Email : jmanikandan021@gmail.com

புதிய வசதி ! பட்டாவில் பெயர் மாற்றம் இப்போது ஆன்லைனில் செய்யலாம் - தமிழக அரசின் அறிவிப்பு

தமிழகத்தில் இறந்தவர்களின் பெயர்களை பட்டா ஆவணத்திலிருந்து நீக்கி, புதிய உரிமையாளர்களின் பெயர்களை சேர்க்கும் வசதியை தமிழக அரசு புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த புதிய நடவடிக்கையின் மூலம், பொதுமக்கள் இனி எந்த அலுவலகத்துக்கும் செல்வதற்கான அவசியம் இல்லாமல், வீட்டிலிருந்தபடியே பட்டா பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம்.

எளிய ஆன்லைன் விண்ணப்ப நடைமுறை:

பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய விரும்பும் பொதுமக்கள், கீழ்க்கண்ட மூன்று வழிகளிலிருந்து எதனையும் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்:

1. தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ இணையதளம்: https://eservices.tn.gov.in
2. இசேவை மையங்கள் (E-Seva Centres)
3. TN Nilam Citizen Portal

அதற்கான தேவையான ஆவணங்களை இணைத்தாலே போதும்; விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட வருவாய் அதிகாரிகள் சரிபார்த்து பட்டா பெயர் மாற்றம் விரைவாக நிறைவேற்றப்படும்.

மாற்றங்களின் முக்கிய அம்சங்கள்:

★ பட்டா மற்றும் சிட்டா ஆவணங்களில் பெயர் மாற்றம், சேர்த்தல், நீக்குதல் ஆகியவை அனைத்தும் ஆன்லைனில் செய்யலாம்.

★ செயல்முறை முழுவதும் பாரத சேவை மையங்கள் மற்றும் இணையத்தின் மூலம் துரிதமாக நிறைவேற்றப்படும்.

★ புதிய வசதி மூலம் அலைச்சல், தாமதம் மற்றும் லஞ்சம் போன்ற பிரச்சனைகள் குறையும் என அரசு தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு இதன் பயன்

இந்த புதிய திட்டம் மூலம், நிலம் தொடர்பான ஆவணங்களில் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கிறது. மேலும், பட்டா பெயர் மாற்றம் போன்ற முக்கிய செயல்பாடுகள் ஆன்லைனாகியதால், பொதுமக்களுக்கு நேரச் சிக்கனமும், சிரமம் குறைதலும் ஏற்படும்.

உங்கள் மின்சார உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்

தரமான மின்சாரம் மற்றும் நம்பகமான விநியோகத்தைப் பெற நுகர்வோரின் உரிமையைத் தவிர நுகர்வோரின் மின்சார உரிமைகள் (விதிகள்) 2020 நுகர்வோருக்கு பல உரிமைகளை உத்தரவாதம் செய்கிறது.

உரிமைகள் மற்றும் கடமைகள்

ஒவ்வொரு உரிமைதாரரின் கோரிக்கையின் பேரில் மின்சாரம் வழங்க வேண்டும். விநியோக நிறுவனங்களிலிருந்து குறைந்தபட்ச சேவைக்கான உரிமை நுகர்வோருக்கு உள்ளது (விதி 3).

அளவீடு

அனைத்து இணைப்புகளுக்கும் ஸ்மார்ட் முன்பணம் செலுத்தும் மீட்டர் அல்லது முன்பணம் செலுத்தும் மீட்டர் வழங்கப்பட வேண்டும் (விதி 5).

விநியோகத்தின் நம்பகத்தன்மை

24 x 7 மின்சாரம் பெறுவதற்கு நுகர்வோருக்கு உரிமை உண்டு (விதி 10).

புதிய இணைப்பின் வெளியீடு மற்றும் ஏற்கனவே உள்ள இணைப்பை மாற்றியமைத்தல்

விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக tangedco.gov.in அல்லது கைபேசியில் உள்ள செயலி Google Play-ல் TANGEDCO அதிகாரப்பூர்வ செயலி மூலம் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பிப்பதற்கான நடைமுறைகள் அலுவலகங்களில் இருக்க வேண்டும் (விதி 4).

பில்கள்

மின் கட்டணத்தை அனுப்புவது குறித்து வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல் அல்லது இரண்டிலும் தெரிவிக்கப்பட வேண்டும். உரிமம் பெற்றவரின் இணையதளத்தில் பில் செய்யப்பட்ட நாளிலேயே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். நுகர்வோர் தங்கள் கட்டணத்தை இணையதளம் வாயிலாக அல்லது நேரில் செலுத்தலாம் (விதி 6 மற்றும் 7).

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

'புரொஸ்யூமர் (Prosumer) என்பது, மின்சாரத்தை உற்பத்தி செய்பவர் மற்றும் நுகர்வோர் ஆவார். பொது நுகர்வோருக்கு இருக்கும் அதே உரிமைகள் புரொஸ்யூமருக்கும் உண்டு. தாங்களாகவோ அல்லது ஒரு சேவை வழங்குநர் மூலமாகவோ, மேற்கூரை சோலார் ஒளி மின்னழுத்த அமைப்புகள் உட்பட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி அமைப்பு ஒன்றை அமைப்பதற்கு புரொஸ்யூமர் உரிமை பெற்றுள்ளனர்.

மூத்த குடிமக்கள்

விண்ணப்பம் சமர்ப்பித்தல், கட்டணம் செலுத்துதல் போன்ற அனைத்து சேவைகளையும் மூத்த குடிமக்களுக்கு அவர்களின் வீட்டு வாசலில் வழங்குவது விநியோக உரிமைதாரரின் பொறுப்பாகும் (விதி 16).

மின்சார பாதுகாப்பிற்கான குறிப்புகள்

★ தமிழக அரசால் உரிமம் பெற்ற எலக்ட்ரீசியன்களை மட்டும் பணியில் ஈடுபடுத்துங்கள்.

★ கம்பிகள், மீட்டர்கள் மற்றும் பிற தேவையான பொருட்கள் இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் குறியீடு/ எண்ணைக் கொண்டு இருப்பதை உறுதி செய்யவும்.

★ சுவிட்சுகள் (Switches), பிளக் சாக்கெட்டுகள் (Plug sockets) போன்ற மின் பாகங்களில் சேதத்தின் அறிகுறிகளை கண்டவுடன் உடனடியாக மாற்றவும்.

★ மின் விபத்துகளைத் தவிர்க்க உங்கள் மின்சார மீட்டருக்கு அருகில் எர்த் லீக்கேஜ் சர்க்யூட் பிரேக்கர்களை (ELCB) நிறுவவும்.

★ மிக்ஸி, கிரைண்டர், தண்ணீர் பம்புகள், குளிர்சாதன பெட்டி, ஹீட்டர், அயர்ன் பாக்ஸ் போன்ற அனைத்து ஒற்றை மின் கட்ட கருவிகளும் மூன்று பின் சாக்கெட்டுகளுடன் மட்டுமே இணைக்கப்பட வேண்டும். புவித்தொடுப்பு கம்பி இணைப்பு இல்லாத இரண்டு பின் சாக்கெட்டுகள் மின்சார அதிர்ச்சியின் போது பாதுகாப்பை வழங்காது.

★ பல பின் சாக்கெட்டுகளை பயன்படுத்தி தனிப்பட்ட சுமைகள் அல்லது அதிக சுமைகள் மூலம் மின் சாக்கெட்டுகளை ஓவர்லோட் செய்ய வேண்டாம். எலக்ட்ரிக்கல் கேஜெட்களை மாற்றும் போது, கேஜெட்களை அதே மதிப்பீட்டில் மாற்றவும் (இது 'வாட்ஸ்' இல் குறிப்பிடப்படும்).

★ அடித்தளத்தில் மீட்டர் இருந்தால், அடித்தளத்தில் நீர் கசிவு, கழிவு நீர் கசிவு அல்லது தண்ணீர் தேங்காமல் இருப்பதை உறுதிப்படுத்தவும்.

★ மதிப்பீடுகள் / ரீடிங் எடுப்பதற்கு மீட்டரை எளிதாக அணுகுவதை உறுதி செய்யவும்.

★ 15 மீட்டருக்கும் அதிகமான உயரம் கொண்ட பல மாடிக் கட்டிடங்களுக்கு மின்சாரம் பெறுவதற்கு முன் மின் ஆய்வாளரிடம் அனுமதி பெற வேண்டும்.

மின் பாதுகாப்புக்காக TANGEDCO உடன் இணைந்து பணியாற்றுதல்

★ மின்விளக்குகள், மின்விசிறிகள், சுவிட்சுகள், 250Vக்கு மிகாமல் மின்னழுத்தம் கொண்ட வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை மாற்றுவதைத் தவிர, நுகர்வோர் வளாகத்தில் உள்ள எந்த மின் வேலைகளும், TANGEDCOவிடம் முறையான அனுமதி பெற்ற பிறகு மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ TANGEDCO அதிகாரிகளைத் தவிர வேறு எந்த நபரும் நுகர்வோர் வளாகத்தில் சப்ளையர் நிறுவிய சேவைத் தடவழிகள் மற்றும் உபகரணங்களில் தலையிடக்கூடாது.

★ மின் கம்பிகளுக்கு அருகில் உள்ள மரங்களின் கிளைகளை வெட்டுவதற்கு முன் TANGEDCOவிடம் முறையான அனுமதி பெறவும்.

★ மின் கம்பம் அல்லது துணை சாதனங்களில் துணிகளை உலர்த்தாதீர்கள் மற்றும் கால்நடைகளை கட்டாதீர்கள்.

★ 250V மின்னழுத்தங்களுக்கு மேல் உள்ள மின் கட்டமைப்புகளில் “ஆபத்து அறிவிப்புகளை” பார்க்கவும்.

செல்போன் செயலிகள் மூலம் கடன் கொடுத்து ஏமாற்றும் கும்பல்

கடன் பெறுவது என்பதே மிகப்பெரிய சிக்கலை ஏற்படுத்தும். ஆனால், செல்போன் செயலிகளை பதிவிறக்கம் செய்து அதன் மூலம் கடன் பெற்று அவர்களின் வலையில் வீழ்வது என்பது மிகப்பெரிய துயரம். மோசடியாளர்கள், ஆன்லைன் கடன் செயலி மூலம் எளிய மக்களை ஏமாற்றி குறைந்த வட்டியில் கடன் வழங்குகிறோம் என ஏமாற்றுகிறார்கள்.

குறைந்த வட்டி மற்றும் எளிய முறையில் கடன் கிடைக்கிறதே என்று எண்ணி, செல்போனில் ஒரு செயலியை பதிவிறக்கம் செய்து விடுவார்கள். ஆனால், அந்த செயலியை பதிவிறக்கம் செய்யும்போதே அது உங்கள் செல்போனில் இருக்கும் தொடர்பு எண்களை பயன்படுத்த அனுமதிப்பீர்களா என்று கேட்கும். அதற்கு ஆம் என்று சொன்னால்தான் அடுத்த கட்டத்துக்கு நகரும். ஒருவேளை மறுத்து விட்டால் கடன் செயலி பதிவிறக்கம் ஆகாது. பதிவிறக்கம் செய்ய நினைத்தவருக்கு வெறும் பணப்பிரச்சனை மட்டுமே இருக்கும்.

ஆனால், தொடர்பு எண்களை பயன்படுத்த அனுமதி கொடுத்து, கடன் செயலியை பதிவிறக்கமும் செய்துவிட்டால் ஒருவர் சந்திக்கும் பிரச்சனைகளை சொல்லி மாளாது. சில செயலிகளோ செல்போனில் இருக்கும் புகைப்படங்களையும் பயன்படுத்த அனுமதி கோரும். ஆனால், ஒரு கடன் செயலிக்கு இந்த தகவல்கள் ஏன் தேவை என்று பதிவிறக்கம் செய்யும் யாருமே யோசிக்கப்போவதில்லை.

ஒருவேளை எல்லாவற்றுக்கும் ஆம் என்று கொடுத்து கடன் செயலியை பதிவிறக்கம் செய்து, அவசரத் தேவைக்கு வெறும் ஆயிரம் அல்லது 3 ஆயிரம் கடன் பெற்றவர்கள் அதனை திருப்பிக் கொடுத்தாலும் கூட அவர்கள் செயலாக்கக் கட்டணங்கள் என பல விஷயங்களுக்காக கடன் பெற்றவர்களை திரும்பத் திரும்ப பணம் அனுப்புமாறு தொல்லை கொடுக்கிறது ஏமாற்றும் கும்பல். கடன் பெற்றவர் பணத்தைக் கொடுக்க மறுத்து விட்டால், அவரைப் பற்றி அவதூறாக அவருடைய தொடர்பு எண்களுக்குத் தகவல் அனுப்பப்படும் என மிரட்டுகிறார்கள்.

மேலும், சில மோசடி கும்பல்கள், கடன் பெற்றவரின் புகைப்படத்தை மார்பிங் செய்து வீடியோவாக பதிவேற்றுவோம் என்று மிரட்டி பணம் பிடுங்கும் சம்பவங்களும் நடந்தேறியிருக்கின்றன. நமது சொந்த பந்தங்களுக்கு நம்மைப் பற்றி தவறான தகவல்கள் அனுப்பப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் பலரும் மோசடி கும்பல் கேட்கும் பணத்தை கடன் பெற்றாவது கொடுத்து விடுவார்கள்.

இதுபோன்ற சம்பவங்களில் உடனடியாக புகார் கொடுக்கும்பட்சத்தில் சைபர் குற்றவாளிகளிடமிருந்து தப்பிக்கலாம் என காவல்துறை எச்சரிக்கிறது.

200 யூனிட் வரை மின்சாரம் இலவசம். 2.23 கோடி குடும்பங்கள் பயன்பெறும்

(500க்கு மேல் 100 யூனிட் இலவசம்)

தமிழகத்தில் பொறுப்பேற்றுள்ள விஜய் தலைமையிலான புதிய அரசு அறிவிப்பின்படி, இரு மாதங்களில், 500 யூனிட் வரை மின்சாரத்தை பயன்படுத்துவோருக்கு, 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும். மேலும், 500 யூனிட்டிற்கு மேல் பயன்படுத்துவோருக்கு வழக்கம் போல, 100 யூனிட் இலவச மின்சாரம் கிடைக்கும்.

தமிழகத்தில் மின்சாரம் வழங்கும் பணியை, மாநில அரசின் பொதுத்துறை நிறுவனமான மின் வாரியம் மேற்கொள்கிறது. வீடுகளுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறையும், ஆலைகளுக்கு மாதந்தோறும் மின் பயன்பாடு கணக்கு எடுக்கப்படுகிறது. தற்போது வீடுகளுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை, 100 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்துவோருக்கு மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இதற்காக ஏற்படும் செலவுகளை சமாளிக்க ஆண்டுக்கு, 8,428 கோடி ரூபாயை மானியமாக மின் வாரியத்திற்கு, தமிழக அரசு வழங்குகிறது. இதில், 100 யூனிட் இலவச மின்சாரத்தின் பங்கு, 5,900 கோடி ரூபாய். புதிய முதல்வராக பொறுப்பேற்ற திரு. ச. ஜோசப் விஜய் அவர்கள், தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி, வீடுகளுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் கோப்பில் முதல் கையெழுத்திட்டார்.

இதையடுத்து, அத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான அரசாணையை, எரிசக்தி துறை செயலர் வெளியிட்டுள்ளார். அதன் அடிப்படையில், இன்று முதல் வீடுகளில் மின் பயன்பாடு கணக்கு எடுக்கும் போது, இரு மாதங்களுக்கு ஒரு முறை, 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு, 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும்.

மேலும், 500 யூனிட்டுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளில், 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஆண்டுக்கு, 1,730 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். இந்த நிதி, மின் வாரியத்திற்கு வழங்கப்படும்.

இதுகுறித்து, மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது: தற்போது, வீடுகளுக்கான மின் கட்டணம், 100 முதல் 400 யூனிட் வரை யூனிட்டிற்கு, 4.95 ரூபாய். மேலும், 401ல் இருந்து, 500 யூனிட் வரை யூனிட்டிற்கு, 6.65 ரூபாய். இதில், 100 யூனிட்டிற்கு முழுதும் இலவசம்.

அதற்கு மேல், 101ல் இருந்து, 200 யூனிட் வரை அரசு மானியம் போக, யூனிட்டிற்கு, 2.35 ரூபாயை நுகர்வோர் செலுத்துகின்றனர். 201 முதல் 400 யூனிட் வரை யூனிட்டிற்கு, 4.70 ரூபாய்; 401ல் இருந்து, 500 யூனிட் வரை மானியம் போக, யூனிட்டிற்கு, 6.30 ரூபாயும் நுகர்வோர் செலுத்துகின்றனர்.

புதிய அரசின் உத்தரவுப்படி, 500 யூனிட் மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு, 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும். இதனால், 101வது யூனிட்டில் இருந்து, 200 யூனிட் வரை யூனிட்டிற்கு, 2.35 ரூபாய் செலுத்தி வந்தது, இனி இலவசமாகவே நுகர்வோருக்கு வந்துவிடும். இவ்வாறு அவர் கூறினார்.

இல்லத்தரசிகளே மரப்பலகைகளில் காய்கறி வெட்டுகிறீர்களா? ஆபத்து...

பிளாஸ்டிக் சரியில்லை என்று மரப்பலகைக்கு மாறியவர்களுக்கு இப்போது இன்னொரு அதிர்ச்சி. அதாவது, நாம் காய்கறி வெட்டுவதற்கு பயன்படுத்தும் மரப்பலகை பாதுகாப்பானது இல்லையாம். ஆம், மரத்தாலான வெட்டும் பலகைகள் பாதுகாப்பானவை அல்ல என்கிறார் நவி மும்பை அப்பல்லோ மருத்துவமனையின் மூத்த மருத்துவ உணவியல் நிபுணர்.

மரம் இயல்பிலேயே நுண்துளைகள் கொண்டது. அதாவது நாம் வெட்டிய

உணவிலிருந்து ஈரப்பதத்தை எளிதில் உறிஞ்சிவிடும். தக்காளி சாறு, பச்சை சிக்கன் துண்டுகள் அல்லது இஞ்சி மற்றும் பூண்டு, எண்ணெய்கள் மரப்பலகையால் எளிதில் உறிஞ்சப்படுகின்றன. இந்த ஈரப்பதம் பாக்டீரியா, பூஞ்சை செழித்து வளர அனுமதிக்கிறது.

காலப்போக்கில், இந்த மரப்பலகைகள் கீறல் விட ஆரம்பிக்கின்றன. இந்த சிறிய விரிசல்களை முழுமையாக சுத்தம் செய்வது கடினமானது. மேலும், சால்மோனெல்லா, ஈ கோலி மற்றும் லிஸ்டீரியா போன்ற தீங்கு விளைவிக்கும் நோய்க்கிருமிகள் இதில் வளர ஆரம்பிக்கின்றன. இந்த பாக்டீரியாக்கள் நாம் தயாரிக்கும் உணவை மாசுபடுத்துவது மட்டுமின்றி ஆபத்தையும் ஏற்படுத்துகின்றன.

நாட்கள் செல்லச் செல்ல இந்தப் பலகைகளின் சிறு துண்டுகள் உதிர்ந்து விழும். இந்த துகள்களை உட்கொள்வது உங்கள் வயிற்று ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல என்றும் உணவியல் நிபுணர் கூறுகிறார்.

சுத்தம் செய்யப்படாத மரக் கட்டிங் போர்டுகள் ஈ கோலி மற்றும் சால்மோனெல்லா போன்ற நோய்க்கிருமிகளை வளர்க்கலாம். இது உணவு மூலம் பரவும் நோய்களுக்கு வழிவகுக்கும். அவை காய்ச்சல், வயிற்றுப்போக்கு, வாந்தி, நீரிழப்பு, குமட்டல் உள்ளிட்ட இரைப்பை குடல் நோய்த்தொற்றுகளையும் ஏற்படுத்தும்.

சிறிய மரப்பிளவுகள் அல்லது பழைய பலகைகளில் இருந்து வரும் சிறிய மரத்துகள்கள் உடலுக்குள் சென்று குடலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இறைச்சி, மீன், காய்கறிகள் மற்றும் பழங்கள் அனைத்தையும் ஒரே பலகையில் வெட்டுவதை நாம் அடிக்கடி வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த நடைமுறையானது தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகளை ஒரு உணவில் இருந்து மற்றொன்றுக்கு மாற்றும் அபாயத்தை கணிசமாக அதிகரிக்கிறது.

Director, M. Kutti Sankar B.Sc.,M.B.A.

Director@ungal.com

Traditional by Generations
BG நாயுடு
ஸ்வீட்ஸ் | ஸ்நாக்ஸ் | பேக்கரி
சொந்த பண்ணை பாலில் தயாராகும் இனிப்புகள்...
திரு. ப. பாலாஜி
சேர்மன் - B.G.நாயுடு
HAPPY DIWALI
BG Naidu
Elaneer Payasam
ROSE MILK
BG Naidu
Traditional by Generations
BG Naidu Sweets Pvt Ltd
Head Office: 29-K, Elango Street, Sangliandapuram
Trichy 620001. sales@bgnaidusweets.com
www.bgnaidusweets.com | /bgnaidusweets
46+ BRANCHES @ TRICHY, MADURAI, PUDUKKOTAI, PERAMBALUR, DINDIGUL, THANJAVUR, PATTUKOTTAI & KARAIKUDI
For Corporate Order & Bulk Orders: +91 9514686868
fssai Lic No. 12418028000292



Rajmahal
Silks • Textiles • Readymades
A Tradition of Excellence in Silk
47 & 48, EAST VELI STREET, MADURAI-1
PH : 72000 07373

Rajmahal's
Silk Story
A Tale of Exclusive Weaves
169, KK NAGAR, EAST 5TH STREET, MADURAI - 20
PH : 95007 95005

Rajmahal's
AISHVARYAM
GOLD • SILVER • DIAMONDS • PLATINUM
THANGANAGAI MAALIGAI
191, EAST VELI STREET, MADURAI - 625001
PH : 74488 80740

WHATSAPP SHOPPING // 72003 33333, 72001 11111 Online Shopping //www.rajmahalsilks.com